பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# The Glories of Thirupparankundram Temple

**Dr. R. Kavitha,** Assistant Professor of Tamil, Mannar Thirumalai Naicker College,
Pasumalai, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-7672-7773**
**DOI: 10.5281/zenodo.20839753**

## Abstract

*Thiruparankundram is a temple where five main deities Murugan, Shiva, Thirumal, Durga, and Vinayagar are worshipped together inside a single sanctum. It is also a place where six religions come together in harmony, including Saivism and Vaishnavism. The temple grounds hold a sacred tree called the Kallathi tree. There are also holy water bodies such as Saravana Poigai and Satya Theertham, known for their medicinal value. When it comes to art, the skill of Tamil sculptors and painters is clearly in the temple's architecture in a marvellous way. The sculpture of Murugan's wedding is especially beautiful and the Ezhuthu Nila Mandapam is another fine example of this craft. The literary side of this place is just as rich in inscriptions, Meikkirthis and Padikams that have preserved the temple's history across many centuries in Tamil. These records begin with the Sangam literature, including Paripadal, Kalithokai, Madurai Kanchi, and Agnanooru. They continue through Thevaram Padikams, Thiruppugazh, and later Pillai Tamil books. Nevertheless, this article studies the glories of the Thiruparankundram temple and how it brings together the divine, human knowledge and deep spiritual feeling. It examines the convergence of six religions, the miraculous water sources, the artistic talent behind the sculptures, the old inscriptions and the spiritual writings that stretch from the Sangam age to the present times with clear evidence.*

**Keywords:** Literature, Thiruparankundram, Godliness, Human Life.

## References

[1] Kanthasami Pillai, A. *Thirugnana Sambantha Moorthi Nayanar Arulich cheytha Thevarap Pathikangal, Moondram Thirumurai*. Tharubura Aadheenam, 1993.
[2] Karuppaiya, Mu. "Tholkappiyathil Ulaka Vazhviyal Marabu." *Ulagat Tamil Kavithai Manaattu Sirappu Malar*, Volume 1, Nov. 2019, p. 157.
[3] Krishnammal, Poo. "Panniru Thirumurai Uraigal." *Tamilmozhi Matrum Ilakkiya Payanpaattu Aayvithal*, Volume 3, Dec. 2020, p. 120.
[4] Krishna Moorthi, Si. Na. *Thiruppugazh Ramayanam*. Eeswari Nilayam, 2004.
[5] Santhanaraman, Ka. *Kanthapuranam*. Poongodip Pathippagam, 2006.
[6] Somasundaranar, Po. Ve. *Paripadal*. Saiva Siddhanta Kazhagam, 2007.
[7] Somasundaranar, Po. Ve. *Maduraikkanji*. Saiva Siddhanta Kazhagam, 2008.
[8] Somasundaranar, Po. Ve. *Pattuppattu*. Volume I, Saiva Siddhanta Kazhagam, 2008.
[9] *Thalavaralaru*. Thirukkovil Veliyidu, Hindu Religious and Charitable Endowments Department, 2023.
[10] Kripanandavariyar, Thirumuruga. *Sekkizharin Periyapuranam*. Gugasree Variyar Pathippagam, 2018.
[11] Nachinarkkiniyar. *Kalithogai*. Saiva Siddhanta Kazhagam, 2008.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

[12] Prabhakaran, Sa. "Andal Kovil Sirappukal." *Pazhamozhi Pannaattu Tamil Aayvithal*, Volume 4A, Special Issue, Sept. 2016, p. 57.

[13] Mugilarasi, Ki. "Sanga Ilakkiyathil Naalvagai Pendirin Pangalippu." *Sanlaks Pannaattu Tamil Aayvithal*, Volume 1, July 2016, p. 72.

[14] Venkatasami Nattar, Na. Mu. *Agananuru – Kalitriyanai Nirai*. Saiva Siddhanta Kazhagam, 2007.

[15] "Thirupparankundram Murugan Kovil." *Hindu Religious and Charitable Endowments Department*, https://thiruparankundrammurugan.hrce.tn.gov.in/ Accessed 23 March 2026.

**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# திருப்பரங்குன்றம் கோயிலின் சிறப்புகள்

**முனைவர் இரா. கவிதா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-7672-7773
**DOI:**

**ஆய்வுச்சுருக்கம்**

*ஒரே கருவறையில் அமையப்பெற்ற ஐந்து முதன்மைத் தெய்வங்களின் (முருகன், சிவன், திருமால், துர்க்கை, விநாயகர்) வழிபாட்டுச் சிறப்பு மற்றும் சைவம், வைணவம் உள்ளிட்ட அறுவகைச் சமயங்களின் ஒருமைப்பாட்டுத் தலம் திருப்பரங்குன்றம். கோயிலின் தல விருட்சமான கல்லத்தி மரம் மற்றும் சரவணப் பொய்கை, சத்திய தீர்த்தம் உள்ளிட்ட வற்றாத தீர்த்தங்களின் மகத்துவமும், அவற்றின் மருத்துவக் குணங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும், கட்டடக்கலை, முருகனின் திருக்கல்யாணச் சிற்ப எழில் மற்றும் 'எழுத்து நிலை மண்டபம்' பற்றிய பரிபாடல் செய்திகள் வழி தமிழரின் ஓவிய/சிற்பக் கலைத்திறன் ஆராயப்பட்டுள்ளது. இக்கோயிலின் வரலாற்றை அரண் செய்யும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள், மெய்க்கீர்த்திகள் மற்றும் பதிகங்கள் வழி, சங்க இலக்கியங்கள் (பரிபாடல், கலித்தொகை, மதுரைக் காஞ்சி, அகநானூறு) முதல் தேவாரப் பதிகங்கள், திருப்புகழ் மற்றும் பிற்காலப் பிள்ளைத்தமிழ் நூல்கள் வரை இத்தலம் பெற்றுள்ள இலக்கியப் பேராளுமை விரிவாகத் விளக்கப்பட்டுள்ளது. மனித வாழ்வில் அறிவோடு உணர்வு கலந்த இறையுணர்வை ஊட்டும் திருப்பரங்குன்றத் தலத்தின் அமைவிடம், அறுவகைச் சமயங்களின் சங்கமம், அற்புதத் தீர்த்தங்கள், சிற்பக் கலைத்திறன், கல்வெட்டுகள் மற்றும் சங்க காலம் தொட்டு பிற்கால இலக்கியங்கள் வரை பரவிக் கிடக்கும் ஆன்மீகப் பதிவுகளை முறையான சான்றாதாரங்களுடன் ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்**: இலக்கியங்கள், திருப்பரங்குன்றம், இறையுணர்வு, மனித வாழ்வு.

**முன்னுரை**

உலக நாடுகளுள் ஆன்மீக பூமி என்னும் சிறப்பைப் பெற்றது இந்தியா. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் திருக்கோயில்களைக் கொண்டது. குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள் உலகப் புகழ் பெற்றவை. அவற்றுள் மதுரை, மகிமலி புரிசை மாடக்கூடல் என்று அழைக்கப்படும் சிறப்பினை உடையது. மேலும் இத்திருக்கோயில்கள் அமைதியும் தொன்மையும் அருளும் நிரம்பப்பெற்ற அழியாச் செல்வங்கள் ஆகும். மதுரை மாநகரில் பல வகையிலும் பெருமை பெற்ற திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள, அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலின் சிறப்பை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**கோயில் அமைவிடம்**

இன்றை தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தப்படியாக பெரிய நகரமாக விளங்குவது மதுரை. 'மும்மைப் புவனங்களின் மிக்க மூதூர்' என்றும் சால்பாய மும்மைத் தமிழ் தாங்கிய அங்கண் மூதூர் என்றும் இலக்கியங்களால் போற்றப்படும் மதுரையில் அமைந்துள்ள சிறப்பு மிக்க இடங்களுள் ஒன்று திருப்பரங்குன்றம் ஆகும். திருப்பரங்குன்றம் இயற்கை எழில் சூழப்பட்டுள்ள கவின் மிகு சிற்றூராகும். இவ்வூரில் முன்னூறு மீட்டர் உயரத்தில் ஒரு மலை உள்ளது. மலையடிவாரத்தில் குன்றே கோயிலாக எழுந்துள்ள எழில் மிகு திருக்கோயிலே

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

திருப்பரங்குன்றம் திருக்கோயில் ஆகும். முருகனின் அறுபடை வீடுகளுள் முதல் படை வீடு என்னும் சிறப்புடையது. மதுரை மாநகரிலிருந்து தென்மேற்கில் ஐந்து கல் தொலைவில் மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ளது.

**சிவத்தலங்களுள் ஒன்று**

பாண்டிய நாட்டில் பாடல் பெற்ற திருத்தலங்கள் பதினான்கு ஆகும். திருஆலவாய், திருக்கொடுங்குன்றம், திருப்புனவாயில், திருஆடானை, திருப்புவனம், திருநெல்வேலி, திரு ஏடகம், திரு கப்பலூர், திருப்புத்தூர், திருராமேசுவரம், திருக்காணப்போர், திருக்குற்றாலம், திருச்சுழியல் இவற்றுள் திருப்பரங்குன்றமும் ஒன்றாகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருட்களைத் தரும் சிறப்புடையவர் முருகப் பெருமான் சைவ சமயக் குரவர் நால்வருள் ஞானசம்பந்தரும் சுந்திர மூர்த்திநாயனாரும் பாடிய பெருமைக்குரிய தலமாகும். தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்ற பாண்டிய நாட்டின் பதினான்கு சைவத்தலங்களுள் திருப்பரங்குன்றமும் ஒன்றாகும்.

**அறுவகைச் சமய வழிபாடு**

காணாபத்தியம், சைவம், வைணவம், கௌமாரம், சௌரம், சாக்தம் என அறுவகைச் சமய வழிபாடு பற்றி வண்ணச் சரபம் தண்டபாணி தேசிகர் குறிப்பிடுவார். இவ்வருவகைச் சமயத்தையும் ஒருங்கே கொண்டது திருப்பரங்குன்றமாகும் மூலஸ்தானத்தில் விநாயகர் ,சிவன், திருமால், துர்க்கை, சூரியன், முருகன் ஆகிய அனைத்துக் கடவுளர்களையும் திருப்பரங்குன்றத்தில் காணலாம்.

**தலத்தின் வேறு பெயர்கள்**

திருப்பரங்குன்றம் என்ற தலத்தின் பெயர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இத்தலம் பொதுவாக திருப்பரங்குன்றம் என அழைக்கப்பட்டாலும் இலக்கியங்களிலும் புராணங்களிலும் இதற்கு வேறு பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. திருப்பரங்கிரி, குமாரபுரி, தென்பரங்குன்றம், தண்பரங்குன்றம், பராசதலம், விட்டனுதுருவம், கந்த மாதனம், சுவாமிநாதபுரம், முதல்படைவீடு போன்ற பல பெயர்களால் போற்றப்படுகிறது. இத்தலம் ஒரு சிவத்தலம் ஆகும். இருப்பினும் முருகனின் பெருமை இத்தலத்தில் சிறப்பு பெற்று விளங்குவதால் இன்றும் முருகன் கோயிலாகவே போற்றப்பட்டு முதல் படை வீடு என்னும் பெருமைக்குரியதாகத் திகழ்கிறது.

**தென் - தெற்கு பரன் - கைலாயம் - குன்று - மலை - தென்பரங்குன்று - தெற்கு கைலாய மலை என்றும் இப்பதியைச் சிறப்பித்துக் கூறலாம். (தல வரலாறு, ப. 10)**

குடைவரைக் கோயிலான இத்திருக்கோயில் சிவபெருமனுக்காகவே தோற்றுவிக்கப்பட்டதெனினும் பிற்காலத்தில் இது முருகப் பெருமானின் சிறப்புத்தலமாக விளங்கி வருகிறது.

**தல விருட்சம்**

ஆதிகாலத்தில் மனிதர்கள் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்தனர். இவ்வாறு வனத்தை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நாகரீக வளர்ச்சி கண்டனர். காடுகள் அழிந்து நகரங்களாக மாற்றப்பட்ட பிறகு தெய்வங்ககளுக்குப் பெருங்கோயில்கள் கட்டப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட கோயிகளில் ஆதியில் இருந்த மரத்தினை அழிக்காது தல விருட்சம் என்றவாறு போற்றினர். அவ்வகையில் திருப்பரங்குன்றத்தின் தலமரம் கல்லத்தி மரமாகும். இந்த மரம் திருவாட்சி மண்டபத்தின் கீழ்புறம் லெட்சுமி தீர்த்தம் செல்லும் வழியில் வசந்த மண்டப வாசல் அருகே அமைந்துள்ளது.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**தல தீர்த்தங்கள்**

தமிழர்கள் பழங்காலத்திலேயே நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தனர். மரங்களை கோயிகளில் தல விருட்சங்கலாகப் பாதுகாத்தவர்கள் நீர் நிலைகளை அதன் சிறப்பு கருதி நீர்தலங்களாக வழிபட்டனர். நீர் தலங்களாகிய கிணறு, குளம், கடற் கரை இவையாவும் கடவுள் தன்மை பெற்றிருப்பதால் இதில் நீராடினால் உடற் பிணியும் பிறவிப்பிணியும் நீங்கும் என்பது நம்பிக்கையாகும். இதையே அப்பர் பெருமானும் **“சென்ற நாடு தீர்த்தங்கள் ஆனது தாமே” (அப்பர் தேவாரம்-திருஆலங்காடு திருத்தாண்டகப் பதிகம், பா. 7)** எனக் குறிப்பிடுகிறார். திருப்பரங்குன்றம் என்னும் இத்திருத்தலத்தில் அமைந்துள்ள அனைத்து தீர்த்தங்களும் சிறப்பு வாய்ந்ததாகும். சரவணப் பொய்கை சத்திய தீர்த்தம், பாதாள கங்கை, பிரம்ம தீர்த்தம், இலக்குமி தீர்த்தம் போன்றவை இத்தலத்தில் உள்ள குறிப்பிடத் தகுந்த தீர்த்தங்கள் ஆகும்.

**தீர்த்தங்களும் அமைவிடங்களும்**

***சத்திய தீர்த்தம்:*** சத்திய தீர்த்தம் மலையின் அடிவாரத்தில் வடக்குப்பக்கத்தில் அமைந்துள்ளது. இதற்கு சத்திய கூடம் என்ற வேறு பெயருமுண்டு. தை மாதம் ரோகினி நட்சத்திரத்தில் இங்குதான் தெப்பத் திருவிழா நடைபெறும்.

**பாதாள கங்கை:** பாதாள கங்கை தீர்த்தம் மலையின் உச்சியில் அமைந்துள்ளது. காசி விஸ்வநாதர் கோயிலுக்கு அருகில் இச்சுனை அமைந்திருப்பதால் இது வற்றாத காசி தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தீர்த்தம் நக்கீரருக்காக முருகப் பெருமான் உருவாக்கியதாக கூறப்படுகிறது.

**பிரம்ம தீர்த்தம்**: பிரம்ம தீர்த்தம் கோவிலுக்குள் கிணறு வடிவில் உள்ளது. இது சன்னியாசிதீர்த்தம் என்னும் பிரம்ம தீர்த்தம் என்றும் வழங்கப்படுகிறது. இத்தீர்த்தமே அபிசேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. பிரம்மன் சரஸ்வதியை மணம் புரிந்து கொண்டு இத்தலத்தில் வழிபட்டு பிரம்ம தீர்த்தத்தை ஏற்படுத்தினார் எனக் கூறப்படுகிறது. தொழு நோயால் துன்பப்பட்ட ஓர் அரசன் இத்தீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கப் பெற்றான் என்பது வழிவழிச் செய்தியாகும் (தல வரலாறு, ப. 22)

**இலக்குமி தீர்த்தம்**: இலக்குமி தீர்த்தம் தெய்வானைக்காக முருகனால் உண்டாக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. இத்தீர்த்தத்தில் சரும நோய்கள் நீங்குவதற்காக உப்பு, மிளகு, வெல்லம் முதலியவற்றை பக்தர்கள் வாங்கிப் போடுகிறார்கள். இவைகளைத்தவிர புத்திப கூவம், புஷ்பமார்தவ தீர்த்தம், சுகிரகுடம், பாண்டவர் தீர்த்தம், கல்யாண தீர்த்தம், மண்டல தீர்த்தம், சித்த தீர்த்தம் போன்ற தீர்த்தங்களும் அமைந்துள்ளன.

திருப்பரங்குன்றம் சங்க காலம் முதல் சிறப்பு பெற்று விளங்கக் கூடிய நகரமாகும். ஊருக்குள் சென்றதும் மயில் மண்டபம் திருக்கோயிலைப் பார்த்த வண்ணம் அமைந்த்துள்ளது. அடுத்தப்படியாக பதினாறு கால் மண்டபத்தைக் காணலாம். இது நான்கு தெருக்கள் கூடும் இடத்தில் அமைந்துள்ளது. இவ்விரு மண்டபங்களும் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். கோயிலின் முகப்பில் ஆஸ்தான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் கருப்பண சுவாமி சன்னதியும் தூண்களில் பத்ர காளி, துர்க்கை, விநாயகர், வீரபாகு மற்றும் முருகப் பெருமான் தெய்வானைத் திருமணக் கோலம், மகாலட்சுமி திருமால் முதலிய சிற்பபங்களும் உள்ளன. இதுவும் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

கோபுர வாயிலைக் கடந்ததும் அமைந்துள்ள மண்டபத்திற்கு திருவாட்சி மண்டபம் எனப் பெயராகும். இம்மண்டபத்திற்கு ஆறுகால் மண்டபம் என்ற பெயரும் உண்டு. பங்குனி உத்திர திருகல்யாணம் முருகனுக்கு இம்மண்டபத்தில் தான் நடைபெறும். திருவாட்சி

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

மண்டபத்தை அடுத்துக் கம்பத்தடி மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் நடுவே நந்தி, மயில், மூசிகம் போன்ற பேருருவங்கள் அமைந்துள்ளன இம்மண்டபத்தில் தான் கொடிமரம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் முன் பகுதியில் அண்டபரனர், பராசர், வியாசர், உக்கிரமூர்த்தி முதலிய விக்கிரங்கள் அமைந்துள்ளன. கம்பத்தடி மண்டபத்திலிருந்து மேலேறிச்செல்லும் வழியில் அதிகார நந்திகேஸ்வரர் காலகண்டி அமையார் மற்றும் இரட்டை விநாயகர் உருவங்கள் உள்ளன. கம்பத்தடி மண்டபத்தை அடுத்து மகா மண்டபம் அமைந்துள்ளது. மகா மண்டபத்தின் மேற்குப் பகுதியில் கோவர்த்தன அம்பிகையின் தனிக் கோயில் உள்ளது. மகா மண்டபத்திருக்கு தெற்குப் பகுதியில் அர்த்த மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்திற்கு மூன்று வாயிகள் உள்ளன.

**கருவறைத் தெய்வங்கள்**

கோயிலின் கருவறை மற்ற கோயில்களை விட வேறுபட்ட அமைப்பில் காணப்படுகிறது. கருவறையில் மட்டும் ஐந்து தெய்வங்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**முருகப் பெருமான்**

முருகப் பெருமான் கருவறைக்குள் அமர்ந்த நிலையில் அருள் பாலிக்கிறார். முருகப் பெருமான் கருவறைக்கு இடப்பக்கம் தெய்வயானையும் வலப்பக்கம் நாரதரும் இடம் பெற்றுள்ளனர். முருகப் பெருமான் திருவுருவத்தின் மேற்குப் பகுதியில் சூரியன், சந்திரன், காயத்திரி, சாவித்திரி, வித்தியாதர், கலைமகள், நான்முகன், இந்திரன், ஆகியோர் காட்சி நல்குகின்றனர். அதற்கு கீழே யானை, மயில், ஆடு, சேவல், ஆகியவற்றுடன் பூதகணங்களும் காட்சியளிக்கின்றன.

**துர்க்கையம்மன் (கொற்றவை)**

அர்த்த மண்டபத்தின் மையப்பகுதியில் பிரதான வாயிலை நோக்கி துர்க்கை சன்னதி அமைந்துள்ளது. மகிசத்தின் தலை மீது நின்ற நிலையில் பெரிய கோலமாக துர்க்கையை காணமுடிகிறது.

**விநாயகர்**

தாமரை மலரில் அமர்ந்த நிலையில் கற்பக விநாயகர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது . பெருபாலும் விநாயகர் உருவங்களில் பாசாங்குசம் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இத்தலத்தில் உள்ள விநாயகர் கையில் மோதகமும் கரும்பும் வில்லும் உள்ளன.

**பவளக்கனிவாய்ப் பெருமாள்**

பவளக்கனிவாய்ப்பெருமாள் சன்னதி மேற்குதிசை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவருக்கு ஒருபுறம் மகாலட்சுமியும் மறுபுறம் மதங்கமா முனிவரும் அமைக்கப்பட்டுள்ளனர் . பெரும்பாலும் அனைத்து ஆலயங்களிலும் சிவ பெருமானுக்கு நேரே நந்தி இருக்கும் ஆனால் இத்தலத்தில் திருமால் இருப்பதால் இவருக்கு மால்விடை என்ற என்ற சிறப்பு பெயரும் உண்டு. இத்தகைய அமைப்பு வேறு எந்த தளத்திலும் இல்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

**சத்திய கிரீஸ்வரர்**

சத்தியகிரீஸ்வரர் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். சோமஸ்கந்தர் உருவமும் உள்ளது. ஐந்து தெய்வங்களும் ஒரே கருவறையிள் அமைந்திருப்பதை வேறு எந்த கோயிகளிலும் காண இயலாது. அறுபடை வீடுகளில் இத்தலத்தில் தான் முருகப் பெருமான் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். மேலும் இக்கோவில் முருகப்பெருமானின் கையிலுள்ள வேலுக்கே பால அபிஷேகம் நடைபெறுகிறது. **“நசையுநர்கார்த்த மிசை பேராள” (குறுந்தொகை, பா. 216)** என்ற

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

இளவேட்டனாரின் வாக்கிற்கிணங்க பக்தர்களின் வேண்டுதல்களை நிறை வேற்றுவதாக இத்தளம் அமைந்துள்ளது.

**திருக்கோவிலின் ஓவியங்களும் சிற்பங்களும்**

தமிழர்கள் பண்டைய காலம் முதல் ஓவியக் கலையிலும் சிற்பக்கலையிலும் சிறந்து விளங்கினர்.இமயம் முதல் குமரி வரை பரந்து விரிந்த பாரதநாட்டில் உள்ள தமிழகத்தில் பல ஆலயங்கள் உள்ளன. (ச. பிரபாகரன், ப. 57) இக்கோயிலில் ஓவியங்கள் எழுதப் பெற்ற மண்டபங்கள் இருந்தமைக்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன. அம்மண்டபங்கள் ஒன்று சரவணப் பொய்கைக்குச் செல்லும் வழியில் பழுதுற்ற நிலையில் இன்றும் காணப்படுகிறது. எழுத்து மண்டபம் என இது அழைக்கப்படுகிறது. வண்ண ஓவியங்கள் பல பழங்காலத்தில் இருந்தன என்பதைப் பறைசாற்றுவதாக இம்மண்டபம் அமைந்துள்ளது. இதில் துருவச்சக்கரம் சூரியன் முதலான கிரகங்கள், காமன், இரதி அகலிகை கௌதமன் இவர்களது அழகிய ஓவியங்கள் இருந்தன. இம்மண்டபம் காம வேளின் ஆயுதச் சாலையைப் போல் விளங்கியதென பரிபாடல் குறிப்பிடுகின்றது.

**எழுதெழில் அம்பலம் காமவேள்**
**அம்பின் தொழில் வீற்றிருந்த நகர்**
**இன்னபல பல எழுத்து நிலை மண்டபம் (பரிபாடல், பாடல் வரி. 18, 19)**

முருகப் பெருமானை வழிபடச் சென்றார்கள் இவ்வோவியச் சாலையையும் கண்டு மகிழ்ந்த செய்தியை பரிபாடலில் காண முடிகிறது. இக்கோவிலில் அமைந்துள்ளன சிற்பங்கள் இன்றும் கண்களுக்கு விருந்தாய் அமைகின்றன. ஆஸ்தான மண்டபத்தில் உள்ள தூண்களில் அமைந்துள்ள சிற்பங்கள் சிறப்பு வாய்ந்தவை ஆகும். முருகனின் திருமணக் காட்சி சிற்பமாக ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்திலுள்ள சிற்பங்கள் பண்டைய சிற்பக்கலை வல்லுநர்களின் பெருமையை பறை சாற்றும் வண்ணம் உள்ளது. இதர தூண்களில் விநாயகர், துர்க்கை, பார்வதி, பரமசிவன், பெருமாள், மகாலெட்சுமி கூன்பாண்டியன், அதிகார நந்தி, ஞானசம்பந்தர், குலச்சிறை நாயனார், மங்கையர்க் கரசியார், ஆகியோர் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளது. இராஜ கோபுர நுழைவாயிலில் உட்புறத்தில் பன்னிரண்டு தூண்களில் அமைந்துள்ள சிற்பங்கள் வியந்து நோக்கத்தக்கதாகும். திருவாட்சி மண்டபத்தில் பன்றி க்குட்டிகளுக்கு பால் கொடுத்த சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திருகோவிலில் மலையைக் குடைந்தும் தனித்தும் செய்யப்பட்ட சிற்பங்கள் அற்புத வேலைப்பாடுடன் காணப்படுகின்றன.

**கல்வெட்டுகள்**

வரலாற்றை அறிந்து கொள்வதற்கு கல்வெட்டுகளும் சான்றாக அமைகின்றன. பழமையான திருக்கோவில்களில் கல்வெட்டுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதே போல் திருப்பரங்குன்றம் கோவிலின் கல்வெட்டுகள் அக்கோயில் வரலாற்றை விளக்குவதாக அமைகின்றது. **"இத்திருக்கோயிலில் துர்க்கை கருவறை மேல்நிலையிலுள்ள கிரந்தகல்வெட்டில் கலி ஆண்டு 3874 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வட்டெழுத்துக் கல்வெட்டில் சாத்தன் கணபதி திருத்து வித்தது திருக்கோயிலும் ஸ்ரீ தடாகமும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது." (தல வரலாறு, ப. 30) "வீரப்பநாயக்கர் காலத்தில்" (சகம் 1593 அஃதாவது கி.பி. 1671) "அவ்வீரப்ப நாயக்கர் சேதுஸ்நானம் செய்து திரும்பி வருகையில் பரங்குன்றத்து முருகப்பெருமானுக்கு கார்த்திகைப் பௌர்ணமி நாளில் திருவமுதுக்கு நிவந்தம் செய்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது." (தல வரலாறு, ப. 31)** இவை போன்று இன்னும் பல கல்வெட்டுகள் இக்கோவில் காணக்கிடக்கின்றன. இதைத் தவிர மெய்கீர்த்திகளும் இங்கு காணப்படுகின்றன.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**பூவின் கிழத்தி – முதலாம் சடையவர்மக் குலசேகரன்**
**பூமருவிய திருமடந்தையும் – முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்**
**திருமலர் திருவும் – இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்**
**திருமலர் மாது – மாறவர்மன் விக்கிரம பாண்டியன்**

முற்காலப் பாண்டியர் காலத்தில் குடைவரைக் கோயிலாகத் தோற்றம் பெற்ற இத்திருக்கோயில் பிற்காலப் பாண்டிய மன்னர்கள் காலங்களில் சிறப்பு பெற்று நாயக்கர் காலத்தில் அழகிய மண்டபங்களையும் கோபுரத்தையும் பெற்று எழிலுடன் விளங்குகிறது.

**பூஜை மற்றும் திருவிழாக்கள்**

திருக்கோவிலில் நித்திய பூஜைகள் ஆகம விதிப்படி நடத்தப் படுகின்றன. இக்கோயில் திருவனந்தல் முதல் பள்ளியறை பூஜை வரை எட்டுக் கால பூஜைகள் நடத்தப்படுகின்றன. வாழ்க்கை கட்டில் இன்பவெளியை நாடிப் பயணம் செய்யும் மனிதனுக்கு உற்ற துணையாக விளங்குபவன் இறைவன். அவனை வணங்கும் முகமாகவே பூஜைகளும் திருவிழாக்களும் உருவாக்கப்பட்டன. (கி. முகிலரசி, ப. 72) இக்கோவிலில் வருடத்திற்கு 26 திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் சித்திரைத் திருவிழா, வைகாசி விசாகம், கந்தசஷ்டி திருவிழா, திருக்கார்த்திகைத் திருவிழா, பங்குனித் திருவிழா போன்றவை குறிப்பிடத்தகுந்தவையாகும்.

சித்திரை வருடப்பிறப்பன்று முருகப் பெருமானுக்கு தங்கக் கவசம் சாற்றப்படுகிறது. வைகாசி விசாகம் பத்து நாட்கள் திருவிழாவாக நடைபெறுகிறது. ஒன்பது நாட்கள் வசந்த விழாவாகவும் பத்தாம் நாள் விசாகத்தன்று சண்முகப் பெருமானை கம்பத்தடி மண்டபத்தில் எழுந்தருளச் செய்து பாலபிசேக விழாவும் நடைபெறுகிறது. கந்தசஷ்டி திருவிழா இவ்விழா ஏழு நாட்கள் சிறப்பாக நடைபெறுகிறது. பக்தர்கள் ஏழுநாட்களும் கோவிலில் தங்கியிருந்து விரதம் இருந்து வழிபடுவர். சூரசம்கார விழாவும் நடைபெறும். திருக்கார்த்திகைத் திருவிழா கார்த்திகை மாதம் நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் திருவிழாவில் சிறிய வைரத் தேரில் முருகப் பெருமான் இரதவீதிகளில் உலாவருவார். கார்த்திகை அன்று இரவு சொக்கப்பன் கொளுத்தப்படுகிறது. தைக்கார்த்திகை திருவிழா தைமாதம் பத்து நாட்கள் நடைபெறுகிறது. பத்தாம் நாள் காலை, மாலை வேளைகளில் தெப்பத் திருவிழா நடைபெறும். பங்குனித் திருவிழா 14 நாட்கள் நடைபெறும் . இத்திருவிழா தனிச்சிறப்பு வாய்ந்தது. பங்குனி மாதம் கார்த்திகை நாளில் கொடி ஏற்றப்பட்டு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. முருகப்பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் நடைபெறும் விழாவாகும். இவ்விழாவின் போது முருகப் பெருமானுக்கும் தெய்வானைக்கும் திருமணம் நடைபெறும் . தேரோட்டமும் சிறப்பான முறையில் நடைபெறும்.

**வழிபாடு செய்து பயனடைந்தவர்கள்**

புராண காலத்தில் இருந்து தற்பொழுது வரை பிராத்தனைகளை நிறைவேற்றும் தலமாக விளங்குகிறது. மகிசாசுரனை வதம் செய்த அம்பிகைக்கு பிரம்மகத்தி தோஷம் ஏற்பட்டது. இத்தலத்தில் தவமிருந்து தோஷத்தைப் போக்கிக் கொண்டாள். பராசர முனிவர், மகன்களுக்கு மீன்களைத் துன்புறுத்தியதால் சாபம் ஏற்பட்டது. முருகப் பெருமான் உபதேசம் செய்து சாபத்தை நீக்கினார். போகருக்கு பெண்ணாசையினால் ஏற்பட்ட சாபம் இத்தலத்தில் தான் நீங்கியதாக புராணம் கூறுகின்றன. சிவபெருமான் பஞ்சாட்சர மந்திரத்தை உமையவளுக்கு உபதேசித்த போது அவளின் மடியில் அமர்ந்திருந்த முருகப் பெருமானும் கேட்க நேர்ந்தது. வேதத்தை குருமுகமாக அன்றி மறை முகமாகக் கேட்டதால் முருகனுக்கு பாவம் ஏற்பட்டது. முருகன் பரங்குன்ற நாதரை வழிபட்டு தன்பாவத்தைப் போக்கிக் கொண்டார். அரிச்சந்திரன் இத்தலத்தில் முருகப்பெருமானுக்கு விழா எடுத்து முருகனின் அருள் பெற்று முக்தியும்

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

அடைந்தார் என புராணங்கள் கூறுகின்றன. இத்தலத்தை சிபிச்சக்கரவர்த்தி, பாண்டிய நாயக்கர் மன்னர் பலரும் வழிபட்டனர். சமயக்குரவர் வழிப்பட்ட தலமாக உள்ளது. நக்கீரர் அருணகிரிநாதர், குமர குருபரர், தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் போன்ற மகான்களும் வழிபட்டு பயனடைந்த தலமாக பரங்குன்று விளங்குகிறது.

**சங்க இலக்கியங்களில் திருப்பரங்குன்றம்**

திருப்பரங்குன்றத்தின் பெருமையை சங்க இலக்கியங்களிலும் காணமுடிகிறது. இவ்வூரில் எப்போது திருவிழாவின் ஓசை முழக்கம் கேட்கும் என்பதை, **"தனி மழை பொழியும் தன்பரன்குன்றில் கூலிகொள் சுமை" (மதுரைக்காஞ்சி, பா. 260)** மதுரைக் காஞ்சி கூறுகிறது. கலித்தொகையில் 'வென்வேலன் குன்று' என்று திருப்பரங்குன்றம் குறிக்கப்பட்டிருக்கிறது.

**ஒன்னாதார்க் கடந்த டூஉம் உரவுநீர்**
**மாகொன்றை வென்வேலன்**
**குன்றின் மேல் விளையாட்டும் கொல்(கலி. குறிஞ்சிக்கலி, பா. 37)**

என கலித்தொகை கூறுகிறது. திருப்பரங்குன்றத்துக்கு முருகனை வணங்கும் மக்கள் அவனை இசையோடு வணங்கிப் போற்றுகின்றனர். இச்செய்தியை,

**மாலை மாலை அடியுறை இயைநர்**
**மேலோர் உறையுகளும் வேண்டுநர் (பரிபாடல், பா. 17 )**

என பரிபாடல் கூறுகிறது. நக்கீரர் தம் திருமுருகாற்றுப் படையில் திருப்பரங்குன்றம் முருகனை பின்வருமாறு பாராட்டுகிறார்.

**கண்போல் மலர்ந்த காமர்தனை மலர்**
**அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்**
**குன்றமர்ந்து உரைத்தாலும் உரியன்(திருமுருகாற்றுப் படை , பா. 16)**

எனப் போற்றுகிறார்.

**தேவாரப் பதிகங்கள்**

திருப்பரங்குன்றம் திருத்தலத்தைப் பற்றி திருஞான சம்பந்த சுவாமிகள் பதிகம் சிறப்பு வாய்ந்தவையாகும். 'வளர்பூங்கோய்கம்' (தலவரலாறு, ப. 61) என்றவரி திருப்பரங்குன்றத்தின் எழிலை விளக்குகிறது. காரைகாலம்மையார் முதல் சேக்கிழார் வரை சைவ சமயத்தை எழுச்சிபெறச் செய்த நாயன்மார்கள் சைவத்தைப் பாடியுள்ளனர் (பூ. கிருஷ்ணம்மாள் , ப. 120) சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஏழாம் திருமறையில் திருப்பரங்குன்றத்தைப் பாடியுள்ளார்.

**சூர் மருங்கு அறுத்த சுடர் இலை நெடு வேல்**
**சினம் மிகு முருகன் தண்பரங்குன்றது (அகநானூறு, பா. 59)**

சூரபதுமனை அவன் சுற்றத்தோடு வீழ்த்திய ஒளிவிடும் வேலையுடையவன் முருகன். அப்படிப்பட்ட சினம் மிகுந்த முருகன் வீற்றிருக்கும் குளிர்ச்சி பொருந்திய திருப்பரங்குன்றம் என அகநானூறு குறிப்பிடுகிறது. மதுரை கஞ்சியிலும் 260 முதல் 270 வரை உள்ள வரிகள் முருகனின் பெருமை பற்றி பேசுவதாக உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகத்தில் பதினோறாவது பாடலில் உலகாண்ட மூவேந்தர் முன்னே **(சுந்தரமூர்த்தி தேவாரம், 7ஆம் திருமுறை, பா. 11)** என வருகின்ற அடி சுந்தரமூர்த்தி நாயனாருடன் சேர சோழ பாண்டிய மன்னர்கள் இத்தலத்திற்கு வந்திருந்து வழிபட்டனர் என்ற குறிப்பு இடம் பெறுகிறது.

மாறவர்மன் அரிகேசரியின் மகன் கோச்சடையன் இரணிதரன் என்பவன். இவனது ஆட்சிகாலத்தில் தான் சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாருடன் மதுரைக்கு வந்தார். இவர்கள் திருப்பரங்குன்றத்தில் சென்று முருகப் பெருமானை வழிப்பட்டனர் என்ற செய்தியை பெரிய புராணம் கூறுகிறது.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

**பரமர் திருப்பாரன்குன்றத்தில் பார்த்திவரோடும்**
**புரமெரித்தார் கோயில் வலம் கொண்டு**
**இன்னிசைபாடிப் பரவிச் சாத்தினார்**
**சங்கரனார் திருப்பரங்குன்றில் (பெரிய புராணம், திருத்தொண்டர் புராணம் , பா. 20)**

போன்ற பாடல்வரிகளால் சேக்கிழார் இச்செய்தியை தெளிவு படுத்துகிறார்.

**திருப்புகழ்**

அருணகிரி நாதர் திருப்பரங்குன்றத்தைப் புகழ்ந்து பல திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார். பொழில் திகழ் திருப்பரங்கிரி, திருப்பரங்கிரி வளநகர், **“திங்களும் செங்கதிரும் மங்கலதங்குமுயர் தென்பரங்குன்றம்” (அருணகிரிநாதர் திருப்புகழ் திருப்பரங்குன்றம், பா. 32)** கண்டின் கனி சிந்துஞ்சுவை புனல் தாங்கும் பொறிக் கந்தங் கொள்பரங்குன்று (அருணகிரிநாதர் திருப்புகழ் திருப்பரங்குன்றம்) என்றெல்லாம் பலவாறு சிறப்பித்துப் பாடியுள்ளார்.

**கந்தபுராணம்**

கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் 2வது படலத்தில் திருப்பரங்குன்றத்தின் சிறப்பையும் பெருமைகளையும் பாடயுள்ளார்.மனிதன் அறிவால் மட்டுமே வாழ்ந்து விடமுடியாது. அவனுடைய வாழ்வில் பெரும்பகுதி உணர்வின் அடிப்படையில் நடை பெறுகிறது. (மு. கருப்பையா, ப. 157) அந்த அடிப்படையில் இறையுணர்வை பிரதிபலிப்பதாக கந்தபுராணம் அமைந்துள்ளது.

**பிற்காலக் கவிஞர்கள்**

நிரம்ப அழகிய தேசிகர் என்பவர் திருபரங்கிரி புராணம் பாடியுள்ளார். கோவிந்தசாமி அய்யர் என்பவர் பரங்கிரி பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். பால கவி திருப்பரங்கிரி என்ற நூலை எழுதியுள்ளார். வே. இராமநாதன் செட்டியார் என்பவர் மும்மணிக் கோவை என்ற நூலை எழுதியுள்ளார். மு. நா. அருணாச்சலக் கவிராயன் என்பவர் பரங்கிரிப் பிள்ளைத்தமிழ், பரங்கிரி வெண்பா, பரங்கிரிஅந்தாதி, பரங்கிரி கலித்துறை அந்தாதி, பரங்கிரி அலங்காரம், பரங்கிரி அநுபூதி, பரங்கிரி மும்மணிக் கோவை, பரங்கிரிக் கோவை போன்ற பல நூல்களைப் பாடியுள்ளார்.

**திருக்கோயில் இணையதளம்**

திருக்கோயிலின் தலவரலாறு, தல அமைவிடம், தலச்சிறப்பு, பூசைக்காலங்கள், நேரலை தரிசனம் முதலியவற்றை வண்ணப்படங்களுடன் கண்டு மகிழும் வகையில் https://thiruparankundrammurugan.hrce.tn.gov.in/ என்ற இணையதளம் தமிழக அரசால் துவங்கப்பட்டுள்ளது. பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறும் தலமாக இன்றும் இத்தலம் போற்றப்படுகிறது. குறிப்பாக இக்கோயிலில் திருமணம் நடைபெறுவதர்காகச் செய்யப்படும் பிரார்த்தனை தலம் என அழைக்கப்படுகிறது.

**முடிவுரை**

தமிழர்களின் ஆன்மீகம், கலை, கட்டடக்கலை மற்றும் நீர் மேலாண்மைத் திறனைப் பறைசாற்றும் காலப் பெட்டகமாக திருப்பரங்குன்றம் தலம் திகழ்கிறது. கருவறையிலேயே சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் ஆகிய அறுவகைச் சமயத் தெய்வங்களும் ஒருங்கே அமையப் பெற்று, வழிபாட்டு ஒற்றுமைக்கு மிகச்சிறந்த சான்றாகத் திகழ்கிறது. தமிழர்களின் பாரம்பரிய நீர் மேலாண்மையை உணர்த்தும் வண்ணம், ஆன்மீகத்தையும் உடல் பிணி தீர்க்கும் மருத்துவக் குணங்களையும் இணைத்து சத்திய தீர்த்தம், பாதாள கங்கை, பிரம்ம தீர்த்தம் போன்ற வற்றாத நீர்நிலைகள் இன்றும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பரிபாடல் போற்றும் 'எழுத்து நிலை மண்டபம்' முதல் நாயக்கர்

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

காலத்துத் திருக்கல்யாண ஒற்றைக்கல் சிற்பங்கள் வரை, தமிழரின் ஓவிய மற்றும் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சத்தை இக்கோயில் வெளிப்படுத்துகிறது. பாண்டிய மற்றும் நாயக்க மன்னர்களின் கொடைகளையும் திருப்பணிகளையும் விளக்கும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும், மெய்க்கீர்த்திகளும் தமிழக வரலாற்றை மீட்டமைக்கப் பெரிதும் உதவுகின்றன. சங்க இலக்கியங்களான *பரிபாடல்*, *அகநானூறு* முதல் திருஞானசம்பந்தர், சுந்தரரின் தேவாரப் பதிகங்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ் மற்றும் பிற்காலப் பிரபந்தங்கள் வரை, தமிழ் இலக்கிய உலகம் இத்தலத்தை எத்துணை ஆழமாகப் போற்றியுள்ளது என்பது தெளிவாகிறது.

**குறிப்புகள்**

[1] கந்தசாமிபிள்ளை, அ. *திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள், மூன்றாம் திருமுறை*. தருமபுர ஆதினம், 1993.
[2] கருப்பையா, மு" .தொல்காப்பியத்தில் உலக வாழ்வியல் மரபு". *உலகத் தமிழ் கவிதை மாநாட்டு சிறப்பு மலர்*, தொகுதி 1, நவம்பர் 2019, ப .157.
[3] கிருஷ்ணம்மாள், பூ" .பன்னிரு திருமுறை உரைகள்". *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பயன்பாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, டிசம்பர் 2020, ப .120.
[4] கிருஷ்ண மூர்த்தி, சி .நா. *திருப்புகழ் இராமயணம்*. ஈஸ்வரி நிலையம், 2004.
[5] சந்தானராமன், க. *கந்தபுராணம்*. பூங்கொடிப் பதிப்பகம், 2006.
[6] சோமசுந்தரனார், பொ .வே. *பரிபாடல்*. சைவசித்தாந்தக் கழகம், 2007.
[7] சோமசுந்தரனார், பொ .வே. *மதுரைக்காஞ்சி*. சைவசித்தாந்தக் கழகம், 2008.
[8] சோமசுந்தரனார், பொ .வே.*பத்துப்பாட்டு*. தொகுதி I, சைவசித்தாந்தக் கழகம், 2008.
[9] *தலவரலாறு*. இந்துசமய அறநிலையத்துறை, 2023.
[10] கிருபானந்தவாரியார், திருமுருக. *சேக்கிழாரின் பெரியபுராணம்*. குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், 2018.
[11] நச்சினார்க்கினியர். *கலித்தொகை*. சைவசித்தாந்தக் கழகம், 2008.
[12] பிரபாகரன்,ச" .ஆண்டாள் கோவில் சிறப்புகள்". *பழமொழி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 4A, சிறப்பு இதழ், செப்டம்பர் 2016, ப .57.
[13] முகிலரசி, கி" .சங்க இல்லகியத்தில் நால்வகை பெண்டிரின் பங்களிப்பு". *சன்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 1, ஜூலை 2016, ப .72.
[14] வேங்கடசாமி நாட்டார், ந .மு. *அகநானூறு*. சைவ சித்தாந்தக் கழகம், 2007.
[15] "திருப்பரங்குன்றம் முருகன் கோவில்". *இந்துசமய அறநிலையத்துறை*, https://thiruparankundrammurugan.hrce.tn.gov.in/ 23 மார்ச் 2026 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.